மங்கல வைபவங்களுக்கு
ஏற்ற பட்டுப் புடைவைகள்
மற்றும் சகல விதமான
ரெடிமேற் வகைகளுக்கு
ராசி சில்க்ஸ்

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரிஸ்
★ டபிள் செற் பீஸ் பெனாரிஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான
பட்டுப் புடைவைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
70, 71A, நவீன சந்தை,
(உட்புறம்) யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 29 வெள்ளிக்கிழமை (11 – 02 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 76

# நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்வதற்கு அரசு அச்சம்!

## நாடாளுமன்ற அமர்வுகளை ஒத்திவைப்பதற்கு முயற்சி

கொழும்பு, பெப்ரவரி 11

மார்ச் மாதம் நடைபெற உள்ள நாடாளுமன்ற அமர்வுகளை ஒத்திப்போடுவதற்கு அரசு முயற்சிப்பதாகவும் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கூட்டாகக் கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்வதற்கு அரசு அஞ்சுவதே இதற்குக் காரணம் என்றும் எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை நாடாளுமன்றக் கட்டடத்தில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் வைத்து பி. பி. ஸி. சிங்களச் சேவை செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோவுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல் மற்றும் தென் மாகாணசபைத் தேர்தல் ஆகியவை நடைபெற உள்ள சமயம் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் நடைபெறுமிடத்து, அரசு மீது சுமத்தப்படவுள்ள குற்றச்சாட்டுக்களை சாதுரியமாக தவிர்த்துக் கொள்வது அரசின் நோக்கம் என்றும் — திருமதி பண்டாரநாயக்கா மேலும் கூறினார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தின் போது ஊழல், அதிகார துஷ்பிரயோகம் பற்றிய தகவல்கள் வெளியிடப்படின் அதனால் ஏற்படக்கூடிய பாதிப்பை அரசு நன்குணர்ந்து உள்ளது என்றும் திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

மார்ச் மாதத்தில் நாடாளுமன்ற அமர்வுகளை நடத்தாது விடுவது பற்றிய கருத்து அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்ட மாநாட்டில் சமர்பிக்கப்பட்டதாயினும் எதிர்க்கட்சிகளின் ஆதரவு இல்லாத இக்கோரிக்கைக்கு வாய்ப்பளிக்க வேண்டாம் என்று தாம் சபாநாயகரை கேட்டுள்ளதாகவும் திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

தெற்கிலும் கிழக்கிலும் தேர்தல் நடைபெறும் காலத்தில் அரசுக்கு எதிரான எதுவும் நாடாளுமன்றத்தில் வெளியாகாமல் இருப்பதை உறுதிசெய்யவே அரசு இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பிரபா கேட்பதையே சு.க. வும் கேட்கிறது

#### ஐ.தே.க பத்திரிகை கூறுகிறது

மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வேண்டும் என்று விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் கேட்கிறார். இதனையே சுதந்திரக் கட்சியும் தற்போது கேட்கிறது. ஈழம் கோரிப் போராடும் பிரபாகரனின் யுத்தத்தை இது நியாயப்படுத்துவதாக உள்ளது

ஐ.தே.க. வின் கட்சிப் பத்திரிகையான 'சியரட்ட' மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

சந்திரிகா சுதந்திரக் கட்சியில் இணைந்த பின்பு, சுதந்திரக் கட்சியின் வடக்கு — கிழக்குப்பிரச்சினை தொடர்பான கொள்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

என்றும் —

இதனால் சுதந்திரக் கட்சிக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, சந்திரிகாவை மேல் மாகாண முதலமைச்சர் பதவியில் இருந்து நீக்க முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன என்றும் மேலும் 'சியரட்ட' தெரிவித்துள்ளது.

(இ-9)



முச்சந்தி முரளி

நிலவுக்கு அஞ்சி பரதேசம் போற பிரஜைகள் தான் இவையள்......

### அளவெட்டி ஏழாலை நோக்கி ஷெல்

யாழ்ப்பாணம், பெப். 11

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று அதிகாலை 2.30 மணிக்கு அளவெட்டி, தெல்லிப்பழை, ஏழாலைப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை மாதகல் இராணுவ முகாமில் இருந்தும் ஷெல் தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன.

இதேபோல நேற்று முன்தினம் இரவும் மாதகல் இராணுவ முகாமில் இருந்து ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-13-15)

### பஸ்-ரயில் மோதி நால்வர் மரணம்

கொழும்பு, பெப். 11

கொழும்பு, ஒருகொடவத்த ரயில் கடவையில் நேற்று முன்தினம் பஸ் ஒன்று ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில், நால்வர் உயிரிழந்தனர் மேலும் 12 பேர் படுகாயமடைந்தனர்.

25 பயணிகளுடன் சென்ற தனியார் பஸ் ஒன்றே கடவையைக் கடக்க முற்படுகையில் விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-6)

## 700 தொன் சீனி கோமாரியில் வரும்

யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லப்படுவதற்காக சுமார் 700 மெற்றிக் தொன் சீனியை 'கோமாரி' கப்பலில் ஏற்றும் வேலைகள் கொழும்பு துறைமுகத்தில் ஆரம்பமாகியுள்ளதாக நேற்று அங்கிருந்து கிடைத்த தகவல் ஒன்று தெரிவித்தது.

குடா நாட்டில் சீனிக்கு நிலவும் தட்டுப்பாட்டு நிலையை அடுத்து 'கோமாரி' கப்பலில் அதிகளவு சீனியை எடுத்துவர ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஐ. தே. க, எம்.பிக்கள் 40பேர் காமினிக்கு எதிராக மகஜர்

கொழும்பு, பெப். 11

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்கள் 40 பேர் காமினி திசநாயக்காவுக்கு எதிராக மகஜர் ஒன்றைத் தயாரித்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ளனர் என்று இன்று வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

காமினிதிசநாயக்கா ஐ.தே.கவில் சேர்ந்ததற்கும், அவருக்கு அமைச்சர் பதவி வழங்க ஏற்பாடு செய்வதற்கும் இந்த மகஜரில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகஜரில் கையொப்பமிட்டுள்ள 40 எம்.பிக்களில் அநேகர், முன்னர் காமினி — லலித் குழுவினர் பிரேமதாசவுக்கு எதிராக கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிட்டவர்கள் என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது

இதுபற்றி ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்புகொண்டபோது "அந்த 40 எம்பிக்களும் விரும்பினால் வீட்டுக்குச் செல்லட்டும்" என ஜனாதிபதி செயலகத்தின் பொறுப்புமிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்றும் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

(ஒ-9)

## ஆயர் கெனத், மற்றும் மெதடிஸ்த தலைவர் புலிகளுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம் வந்துள்ள அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோவுடன் மெதடிஸ்த திருச்சபைத் தலைவர் கலாநிதி கிங்ஸ்லி முத்தையாவும் இன்று வெள்ளிக்கிழமை விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தவிருக்கின்றார்.

அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ குழுவினர் இன்று விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தவிருந்தனர்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் வண. கலாநிதி கிங்ஸ்லி முத்தையா, சபையின் தென்பிராந்தியத் தலைவர் எல்மோ பெர்னாண்டோ ஆகியோரும் அங்கிலிக்கன் ஆயருடன் சேர்ந்து புலிகள் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தவிருக்கின்றனர்.

இன்றைய அரசியல் சூழ்நிலை தொடர்பாகவும், தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் இன்றைய பேச்சுக்களில் ஆராயப்படும். (இ-8-5)

### முப்படைகளையும் பாரிய அளவில் விஸ்தரித்து

## பிரிவினைக்கு எதிராக போர் புரிவதில் இலங்கை முன்னணி

### கொழும்புப் பத்திரிகையில் தகவல்

கொழும்பு, பெப். 11

ஒரு நாட்டினுள்ளேயே பிரிவினைவாத அமைப்பு ஒன்றுக்கு எதிராக முப்படைகளையும் பாரிய அளவில் விஸ்தரித்து மிக நீண்ட யுத்தத்தை மேற்கொள்ளும் நாடு ஒன்று உலகில் காணப்படுமானால் அந்நாடு இலங்கையாகவே இருக்க முடியும்.

கொழும்பில் வெளியாகும் தமிழ் வாரமலர் ஒன்றில் வெளியாகியுள்ள கட்டுரையில் இவ்வாறு விவரிக்கப்பட்டுள்ளது.

வடக்கே பெரும்பலத்துடன் இருந்து வரும் விடுதலைப் புலிகள் இராணுவத்தினரை மூர்க்கத்தனமாக எதிர்கொண்டவர்களாக இருக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல்களை தரைமார்க்கமாக முன்னெடுப்பதில் படையினர் எச்சரிக்கையாக நடந்து கொள்கிற போதிலும்—

வான் வழித் தாக்குதல்களையும், ஷெல் குண்டு வீச்சுக்களையும் குடாநாடு மீது இடைவிடாது மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த ஆகாயமார்க்கமான தாக்குதல்களினால் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் மிகக் குறைவானவையாகவே காணப்படுகின்றன. புலிகளின் இலக்குகளை நோக்கி வீசப்பட்ட தாக்குதல்களினால் பொதுமக்களின் உயிர், உடைமைகளுக்கே பாரியஅளவு சேதம்ஏற்பட்டுள்ளது.

வடக்கே தமது ஆதிக்கத்தைச் செலுத்திவரும் விடுதலைப் புலிகள் தம்மை ஒரு முழு அளவிலான இராணுவ அமைப்பாக மாற்றிக்கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

இந் நிலையில் தமிழ் பேசுவோரையே முற்று முழுதாகக் கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரும், 99 சத வீதம் சிங்கள மொழி பேசுவோரைக் கொண்ட இலங்கை இராணுவமும் இருவேறு இனங்களின் இராணுவ அமைப்புக்களாகவே விளங்கியிருக்கக் காணப்படுகின்றன.

அரச தரப்பினர் வடக்கு

(3 ஆம் பக்கம் பார்க்க)

### கோபாலசாமி கைது

சென்னை, பெப். 11

விலைவாசி உயர்வைக் கண்டித்து நேற்று சென்னையில் நடைபெற்ற மறியல் போராட்டத்தின் போது திரு வை. கோபாலசாமி, சட்டப் பேரவை உறுப்பினர் திரு. செல்வராஜ் உட்பட ஆயிரம் பேர் வரை கைது செய்யப்பட்டனர். [இ-க]

## ஜானகபுர சிப்பாய்கள் 20 பேர் புலிகளின் பாதுகாப்பில்

### நாடாளுமன்றில் அமைச்சர் தகவல்

ஜானகபுர(மண்கிண்டிமலை) முகாம் தகர்ப்பின்போது கைது செய்யப்பட்ட 21 சிப்பாய்கள் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ளவர் என்று நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் கலாநிதி விமல் விக்கிரமசிங்க இத்தகவலை வெளியிட்டார்.

தாக்குதலின் போது கைதான பிரஸ்தாப 21 சிப்பாய்களில் ஒருவர் அண்மையில் விடுதலை செய்யப்பட்டு விட்டார் என்றும்—

இன்னும் 20 சிப்பாய்கள் தொடர்ந்தும் புலிகளின் பாதுகாப்பில் இருக்கின்றனர் என்றும் அமைச்சர் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டார். (ஒ-6)

# இனப்பிரச்சினைக்கு தீர்வு இன்றேல் இலங்கை சிதறுண்டு போகும்

## பிலிப்பீன்ஸின் முன்னாள் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 11

பொது வாழ்வுக்குத் தேவையான நீதிநெறியை நியாயமான அளவுக்கு மதிக்க அரசாங்கம் தவறும் பட்சத்தில் இனப்பிரச்சினைக்கு தீர்வே கிடையாது. அதற்குப் பதில் ஸ்ரீலங்கா சிதறுண்டு போக முடியும்.

பிலிப்பீன்ஸில் இலங்கைத் தூதராகப் பணிபுரிந்து வந்த ஜனாப் இஸ்தஹ்-சேன்லங்கா காரியவசம் சஞ்சிகையில் தாம் எழுதிய கட்டுரை ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

நீண்டகாலமாக இனப்பிரச்சினைக்கு பேச்சுகள் மூலம் தீர்வுகாணுவதற்கு நாம் முயற்சித்து வருகின்றோம். அம்முயற்சியின் பலனை காண முடியாது உள்ளது. ஏன் காண முடியாமல் உள்ளது?

பிரச்சினையின் முழுப்பரிமாணத்தையும் நாம் புரிந்து கொள்வதில் தோல்வி கண்டதே அதற்குக்காரணமாகும்.

அத்துடன் பிரச்சினையின் தார்மீக அம்சத்துக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கத் தவறிவிட்டோம்.

நாகரீக சமுதாயத்தில் நம்பிக்கையின் அடிப்படை இன்றி உடன்பாடு எதுவும் காணப்படுவது கஷ்டமான காரியமாகும். அரசாங்கத்துடனான உடன்படிக்கைகளுக்கும் இது பொருந்தும். தம்மீது நம்பிக்கை வைக்கமுடியும் என்பதை அரசாங்கம் பொதுநீதி நெறிகளை மதிப்பதன் மூலம் வெளிக்காட்ட வேண்டும்.

முன்னர் இருந்த தமிழ் அமைப்புக்களுடன் அரசாங்கங்கள் பல உடன்பாடுகளை செய்து கொண்டன.

அரசாங்கங்களே [illegible] அவற்றை கைவிட்டன.

பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முடியாது என்ற விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு 1977 இல் இருந்த அரசாங்கத்தால் சரி என்று நிரூபிக்கப்பட்டது.

பொது நீதி நெறிகளை மதிக்க மறுக்கும் அரசாங்கம் ஒன்றுடன் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணலாம் என்பதை எதிர்பார்க்க முடியாது.

தற்போதைய அரசாங்கமும் அப்படிப்பட்ட பொது நீதி நெறிகளை மதிக்கின்றதா என்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவில் பயில புலமைப்பரிசில்

யாழ்ப்பாணம், பெப். 11

இந்தியாவில் பட்டப்படிப்பு, பட்டப் பின் படிப்புக் கற்கை நெறிகளைப் பயில்வதற்கு குறிப்பிட்ட எண்ணிக்கையானோருக்கு இந்திய அரசு புலமைப் பரிசில்களை வழங்க உள்ளது.

பட்டப்படிப்பு கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்களை —

ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி உட்பட நான்கு பாடங்களில் சராசரி 60 புள்ளிகளுக்குக் குறையாமல் பெற்றவர்களிடம் இருந்து —

உயர்கல்வி அமைச்சு கோரியுள்ளது.

[illegible] வயதுக்கும், 22 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் இப்புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

மருத்துவம், மருந்தியல், பொறியியல் மற்றும் கற்கை நெறிகளுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படும்.

புலமைப்பரிசில் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர், உயர்கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

இது சம்பந்தமான விண்ணப்பப்படிவத்தின் ஆங்கிலப் பிரதியை இல 15, இராமநாதன் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் உள்ள உதயன் விளம்பரப் பகுதி மனையில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

### வெற்றிடம் 20 விண்ணப்பங்கள் 2,200

யாழ்ப்பாணம், பெப் 11

யாழ் போதனா வைத்தியசாலை அமைய சுத்திகரிப்புத் தொழிலாளர் பதவிக்கு 20 வெற்றிடங்கள் மட்டுமே உள்ளன.

ஆனால் விண்ணப்பங்கள் அனுப்புவதற்கான கடைசித் தினமான நேற்றுவரை 2 200 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது இதற்கான நேர்முகப் பரீட்சைகள் விரைவில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கோழிக்குஞ்சுகள் உடன் விநியோகம், லோமன் சேவல் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. சாம் வெஸ்லி, சிங்கம் வீதி, உடுவில். உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன் ஞானப்பிரகாசா வீதியூடாக. (6798)

முதற்தரமான அல்சேஷன் கறுப்பு நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. இல. 17, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம். (29370)

### இலவச திருமண சேவை

30 வயது, புனர்பூசம், செவ்வாய் 7, கிரகபாவம் 74, கனடாவில் சுயதொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, இலவச திருமண சேவை, யாழ்/நாச்சிமார் கோயிலடி. (29371)

### கோல்டன் கொமட்

கோல்டன் கொமட் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகாபதி" சந்தை இழக்கு ஒழுங்கை, மாவிட்டபுரம். (29376)

### வெளிவந்துவிட்டது

பாலர் வகுப்புகளுக்கான அஷ்டலக்ஷ்மி, பாலர் தமிழ், ABC Book விற்பனைக்கு வந்துவிட்டது. ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம், சிவா பிறின்டேர்ஸ், கைதடி. (6956)

### தேவை

தேவன்ஸ் தயாரிப்புக்களான பற்பொடி, நீலம், சீயாக்காய் பவுடர், கச்சான் அல்வா மற்றும் இனிப்பு வகைகள் சைக்கிளில் வியாபாரம் செய்யக்கூடிய ஆண்கள் தேவை. ஜெயலட்சுமி இன்டஸ்றீஸ், பாடசாலை வீதி, ஆறுகால்மடம். (29328)

பற்பொடி, நீலம், சீயாக்காய் பவுடர் ஒட்டுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை. ஜெயலட்சுமி இன்டஸ்றீஸ், பாடசாலை வீதி, ஆறுகால்மடம். (29327)

### ரமணிச்சந்திரன்

41 விதமான ரமணிச்சந்திரனின் நாவல்களும், கண்ணதாஸன், சிவசங்கரி, சுஜாதா மற்றும் பிரபல எழுத்தாளர்களின் நாவல்களும் விற்பனையாகிறது. பிரதிகளுக்கு முந்துங்கள். ராஜன் புத்தகசாலை, 12, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (6958)

### இன்று சனி மாற்றம்

வாக்கியப் பஞ்சாங்கப்படி இன்று வெள்ளிக்கிழமை [11-2-94] இரவு 10 மணி அளவில் சனி பகவான் கும்ப ராசிக்கு மாற்றமடைகின்றார். சனி மாற்றம் ரூபா 10/- எங்கும் விற்பனையாகின்றது. T. V. பாலா சோதிட நிலையம், புத்தகசாலை, இணுவில். (29352)

---

உ

வண்ணை - சாந்தையர் மடம்

## ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்

சைவ சமய அபிவிருத்திக் கழகம்

## சைவ சமய அறிவுப் பரீட்சை - 1994

✲ பரீட்சை மண்டபங்கள் ✲

M சுட்டெண் மாணவர்களுக்கு - யாழ், இணுவில் மத்திய கல்லூரி.
N சுட்டெண் மாணவர்களுக்கு - யாழ். வண். நாவலர் மகாவித்தியாலயம்
H சுட்டெண் மாணவர்களுக்கு - யாழ். இந்துக்கல்லூரி
V சுட்டெண் மாணவர்களுக்கு - யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி

பரீட்சை நாள்: **13 - 02 - 1994**
ஞாயிறு காலை 9-30 மணி

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சைவ சமய அபிவிருத்திக்கழகம்.

சி/7319

---

## நில அளவையாளர் கலந்துரையாடல்

தமிழீழ நீதிமன்றங்களில் பணிபுரிய விரும்பித் தம்மை பதிவு செய்து கொண்ட சகல நில அளவையாளருக்குமான கலந்துரையாடல் ஒன்று நாளை (12-02-94) சனிக்கிழமை காலை 10மணிக்கு கோண்டாவிலில் உள்ள அரசியல் துறைப் பணிமனையில் நடைபெற உள்ளது. இதில் அரசியல் துறை, நீதித்துறை பொறுப்பாளர்கள் கருத்துக்கள் வழங்க உள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள தமிழீழ நீதிமன்ற நில அளவை வேலைகளில் ஈடுபட விரும்புவோரும், இதுவரை தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளாத அனுமதி பெற்ற நில அளவையாளர்களும் தமது பெயர்களை இத்தினத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

தகுதியிருந்தும் அனுமதி இல்லதிருக்கும் நில அளவையாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் நில அளவையில் ஈடுபட விரும்பினால் அவர்களும் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம். நில அளவைக் கருவிகளை வைத்திருக்கும் சகலரும் இத்தினத்தில் அவற்றைப் பதிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

நில அளவைப் பிரிவு,
படைத்துறைச் செயலகம்.

1994 02 07

(சி/7301)

---

## இலங்கை ஏனு மன்றம்
## 14 ஆவது ஆண்டு இசைவிழா

இடம்: மன்றக கலாமண்டபம்
காலம்: **12 - 02 - 1994 — 26 - 02 - 1994**
தினமும் பிற்பகல் 4.00 மணி — இரவு 10 00 மணி

மேற்படி விழாவில் நாதஸ்வர, தவில், வாய்ப்பாட்டு, வயலின், வீணை, வேணுகானம், மிருதங்க இசை, வில்லிசை, கதாப்பிரசங்கம், பரத நாட்டியம் போன்ற பலதரப்பட்ட இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்

இளங்கலைஞர்களும், முன்னணிக்கலைஞர்களுமாக 500க்கு மேற்பட்ட கலைஞர்கள் பங்குகொள்வர்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

-மேற்படி மன்றத்தினர்.

(சி-7195)

---

PERSONAL

## NEW SCIENCE CENTRE
JAFFNA

## SPOKEN ENGLISH
With
## GRAMMAR
By

Mr M A Hari

B. A Dip In Eng.
புதிய பிரிவு ஆரம்பம்
12-02-94 - 1 P.M.

(சி/ 7307)

---

## ஏல விற்பனை

## வெற்றுப் பலகைப் பெட்டிகள்

கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்

எமது திணைக்களத்தில் பாவனைக்குதவாத வெற்றுப் பலகைப் பெட்டிகள் ஒரு தொகை 1994-02-16 ஆம் திகதி காலை 10 00 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளன. எனவே அவற்றினை ஏலத்தில் பெற்றுக் கொள்ள விரும்புவோர் அன்றைய தினம் காலை 10 00 மணிக்கு கல்வித் திணைக்கள களஞ்சியக் கிளையில் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படுகிறீர்கள். மேற்படி பெட்டிகளைப் பார்வையிட விரும்புவோர் அன்றைய தினம் காலை 9.00 மணிக்குக் களஞ்சியக் கிளையில் பார்வையிடலாம். ஏலத்தில் வெற்றி கொள்வோர், உடனடியாகப் பணத்தினை கணக்காளரிடம் செலுத்துவதுடன் அன்றைய தினமே அவற்றினைப் பொறுப்பேற்று அப்புறப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

—யாழ் கல்விப் பணிப்பாளர்.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
09-02-1994.

[சி/7311]

---

உ

## ⁂ திருமண அழைப்பு ⁂

அன்புடையீர்!

நிகழும் ஸ்ரீமுக வருடம் தை மாதம் 30 ஆம் நாள் (12 — 02 — 1994) சனிக்கிழமை பகல் 12-00 மணி முதல் 1.00 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்,

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**நாகராஜா**
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறை செல்வி
**ஞானகுரி**
அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெற பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தலைப்பாகை அணியும் வைபவம் 8 — 10 நடைபெறும்

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி மு கமலம் குடும்பத்தினரும்,
திரு. திருமதி மு தேவராசாவும்,
(மணமகனின் சகோதரர்),
யூனியன் லேன் கொட்டடி,
யாழ்ப்பாணம்.

புளியங்கூடலைச் சேர்ந்த
திரு திருமதி ச பேரம்பலமும்,
குடும்பத்தினரும்,
பிரம்படி லேன்,
கொக்குவில்.

(29379)

---

உ

## ⁂ திருமண அழைப்பு ⁂

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக ஆண்டு தைமீ 30 ஆம் நாள் (12 — 02 — 1994) சனிக்கிழமை காலை 11-00 மணி முதல் 12 — 15 மணி வரையுள்ள இடப லக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரன்
திருவளர் செல்வன்
**சிறீதரன் (B Sc)**
(சமூகசேவை உத்தியோகத்தர் கச்சேரி வவுனியா), அவர்களுக்கும்

எமது சிரேஷ்ட புத்திரி
திருவளர் செல்வி
**ரஜிதா**
அவர்களுக்கும்

திருமணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு வவுனியா ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெறும் திருமணத்திற்கு தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்:

திரு திருமதி பொ தியாகராசா,
90 சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

திரு. திருமதி இ. இராசரத்தினம்,
223, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

இராசையா அன் சன்ஸ் மருந்துக்கடை,
யாழ்ப்பாணம் & திருநெல்வேலி.

தங்கம்ஸ் களஞ்சியம்,
முத்திரைச்சந்தை, நல்லூர், யாழ்.

வரவேற்பு இல்லம்: 12/1. இராஜதுரை வீதி, வைரவப் புளியங்குளம், வவுனியா.

(இரு வீட்டார் அழைப்பு)

(29225)

---

## யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம் வரையறுக்கப்பட்டது

**31 - 12 - 1992** இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான

## கிராமிய வங்கி மீதிகளை உறுதிப்படுத்தல்

மேற்படி சங்கத்தின் 31-12-1992இல் முடிவடைந்த வருடத்துக்கான கணக்காய்வு நடை பெற்றுக் கொண்டு இருப்பதால் கிராமிய வங்கி வாடிக்கையாளர்கள் அனைவரும் கீழ்க்குறிப்பிடப்படும் திகதிகளில் தமது வங்கி சேமிப்பு கையேடுகளுடன் இல 291, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் வந்து தமது மீதிகளை உறுதிப்படுத்திச் செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

| | க/கு. இல. |
|---|---|
| 15 — 02 — 1994 9-00 மணி முதல் 4.00 மணி வரை | 1 — 746 |
| | 50012 — 51200 |
| 16 02 — 1994 9 00 மணி முதல் 4-00 மணி வரை | 51201 — 51600 |
| 17 02 — 1994 9-00 மணி முதல் 4-00 மணி வரை | 51601 — 52069 |

மேற்குறிப்பிட்ட திகதிகளில் வந்து உறுதிப்படுத்தாத வாடிக்கையாளர்களின் கணக்கு மீதிகள் வங்கியின் பேரேட்டின்படி உறுதிப்படுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

செல்வி யோ. தில்லைநாதன்,
சிரேஷ்ட கணக்காய்வாளர்.

10 — 02 — 1994

[சி-7304]

---

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
அபிவிருத்திச் சங்கம்

## ஆண்டுப் பொதுக் கூட்டம்

காலம்:- 20-2-1994 ஞாயிறு மு ப. 10 00 மணி
இடம்:- யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபம்
தலைவர்:- திரு அ. பஞ்சலிங்கம், அதிபர்

பெற்றோர் அனைவரும் சமுகம் கொடுக்கும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

அ. பஞ்சலிங்கம்
அதிபர்

த. பூபாலசிங்கம்
செயலர்

7.2 94

(சி-7320)

---

## ஐடியல் கல்வி நிலையம்

## கணிதம் - திரு சண்

ஆண்டு **7 — 11** வரை

கணித பாடம் மட்டும் கற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

மேலதிக விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளும் நேரம்:
சனி, ஞாயிறு நாட்களில்
(காலை 7 மணிக்கும் 9மணிக்கும் இடையில்)

பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
[தேசிய சேமிப்பு வங்கி அருகில்]

(29378)

---

மங்களகரமான

## திறப்பு விழா




வாடிக்கையாளர்களினதும், நண்பர்களின் வசதிக்காகவும் புகைப்படத்துறை வளர்ச்சிக்காகவும், புகைப்படத் துறையின் முன்னோடிகளும் கலையின்பம் ததும்பும் கலைஞர்களும் உங்கள் மழலைச் செல்வங்களின் புன்னகையை விழிக் கமராவில் பதிய வைத்து உங்கள் கைகளில் தவழ வைக்கும் கலைஞர்களின் இன்னோர் கலையகம்

இன்று பிற்பகல் 4 - 6 மணிவரையில் உள்ள சுபவேளையில் திறக்கவுள்ளார்கள்.

## பேபி போட்டோ

பல்கலைக் கழகச் சந்தி,
பலாலி றோட்,
திருநெல்வேலி.

சேர். பொன் இராமநாதன் றோட்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

உங்கள் அன்பும் ஆதரவும் ஆசீர்வாதமும் என்றும் எங்களுக்கு வேண்டும்

★ அன்புடன் அனைவரையும் அழைக்கிறோம் ★

[29380]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு: 25 — 05 — 1928



உதிர்வு: 12 — 01 — 1994

## துரையப்பா சிவபாதசுந்தரம்

திதி: 11 - 02 - 1994

[ஓய்வுபெற்ற சுங்கத் திணைக்களம்]
(ரயிற் வெயிற்றர்)

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டும், எமக்கு பலவழிகளிலும் உதவிகளை வழங்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று (11 02-1994) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நாய்க்கண்ணி,
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

(29383)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## கல்வி திட்டத்தில் சூறாவளி!

ஆண்டு 9, 10, 11 ஆம் வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்குப் போதிக்கப்படும் பாடங்கள் திடீரென மாற்றப்பட்டிருக்கின்றன.

ஆட்சி மாறுகின்ற போது கல்வித் திட்டங்கள் மாறி வந்த பாதக நிலைமை மோசமாகி —

கல்வி அமைச்சர்கள் மாறும் போது — கல்வி அமைச்சின் உயரதிகாரிகள் மாறும் போது — கல்வித் திட்டங்களும் மாற்றப்படும் அவல நிலைமை இப்போது வந்திருக்கிறது.

மாறி வரும் உலகில் — விரிந்து வரும் கல்வித் துறையில் — போதனைகள், கல்வி முறைகள், திட்டங்கள் என்பன உலக மாற்றத்திற்கு ஏற்ப மாற்றப்பட வேண்டும் என்பது உண்மைதான். ஆனால் ஆளாளுக்கு நினைத்தபடி — தூர நோக்கு இல்லாமல் — நமது நாட்டின் தள நிலைமைகளை யோசிக்காமல் — மாற்றங்களைச் செய்வதை அனுமதிக்கக்கூடாது.

ஜி. சீ. ஈ. (சா/த) பரீட்சைக்காக மாணவர்களுக்கு மூன்று வருடம் கல்வி போதிக்கும் நிலைமை இலங்கையைத் தவிர வேறு எந்த நாட்டிலும் இல்லை என்று தெரிவித்து—

இந்தத் திடீர் மாற்றத்தைக் கொண்டு வருகிறது, கடந்த 17 வருடங்களில் ஆட்சிக் கட்டிலில் இருக்கும் ஐ.தே.க. அரசு.

புதிய திட்டம் பல ஓட்டைகளைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது; பல பிரச்சினைகளை உருவாக்கப்போகிறது.

அவற்றில் சிலவற்றை கல்விமான்களின் கவனத்துக்கும் பரிசீலனைக்கும் சமர்ப்பிக்க விரும்புகிறோம்.

★ ஆண்டு 9, 10 மாணவர்களின் பாடங்களின் எண்ணிக்கை 12ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதை மாணவர்கள் தாங்குவார்களா?

★ கீழ்வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கில மொழியே சரியாகப் போதிக்கப்படவில்லை என்பது கண்கூடு. அதற்கு போதிய ஆசிரியர்கள் கூட நாட்டில் இல்லை. அப்படியிருக்க திடீரென ஆண்டு 9, 10இல் ஆங்கில இலக்கியத்தை புதுப்பாடமாக அறிமுகப்படுத்தி, அதனை ஜி. சீ. ஈ. [சா. த] பரீட்சைக்கு ஒரு பாடமாக அறிவித்தால் மாணவர்கள் அதனைப் படித்து பரீட்சைக்குத் தோற்றும் நிலைக்கு வரமுடியுமா?

★ சமூகக்கல்வி ஆண்டு 9, 10 வகுப்புகளுடன் நிறுத்தப்பட்டுவிடும். அந்தப் பாடத்தில் இடம்பெற்றிருக்கும் புவியியல், அரசியல் போன்ற துறைகளில் அடிப்படை அறிவைப் பெறும் வாய்ப்பு இனிமேல் ஜி. சீ. ஈ. (சா. த) வகுப்பு மாணவனுக்கு இல்லாமல் போய்விடும்.

★ இடைநிலை வகுப்பில் வர்த்தகபாடம் இல்லாமற் போகிறது. அது போல ஜி. சீ. ஈ. (சா. த.) பரீட்சைக்குரிய எட்டுப்பாடங்களில் அழகியல் கல்வி இல்லை. நாட்டில் — பாடசாலைகளில் — நிறைந்திருக்கும் வர்த்தகம் மற்றும் நடனம், சங்கீதம், சித்திரம் போன்ற பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்கள் இனி என்ன வேலை செய்யப் போகிறார்கள்?

★ ஆண்டு 9, 10, 11 வகுப்புகளில் புதியபாடமாக வரலாறு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

நாட்டின் வரலாறு சம்பந்தமான ஒழுங்கான பாட நூல்களே இல்லை. இருப்பவையும் சிங்கள இனவாதத்தைத் தூக்கி தலையில் வைக்கும்— சிங்கள தேசியவாதத்தை மட்டும் முன்னணிக்குகொண்டு வரும் — திரிபுபடுத்தப்பட்ட வரலாற்று நூல்களே.

பாட நூல்கள் இல்லாத நிலையில் — திரிபுபடுத்தப்பட்டசரித்திரப் புத்தகங்களை வைத்துக்கொண்டு— திடீரென வரலாற்றுப் பாடத்தைப் போதிக்குமாறு உத்தரவிட்டால் அதன் பின்னணி என்ன?

வருங்கால சந்ததிக்கு வரலாற்றைத் திரிபுபடுத்திக் காட்டும் முயற்சியின் ஒரு மறைமுக நடவடிக்கையா, இந்த போதனைப் பாடங்கள் மாற்றும் திடீர் அறிவிப்பு?

## கிழக்கில் தாக்குதல்களை சந்திக்க ராணுவம் தயாராம்

### லக்கி அல்கம சொல்கிறார்

கிழக்கு மாகாணத்தில் எங்கிருந்தும் வரும் தாக்குதல்களையும் சந்திக்க இராணுவம் தயாராக இருக்கிறது.

ராணுவ தலைமை நிர்வாக அதிகாரி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம திருகோணமலையில் செய்தியாளர் மாநாட்டில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

எந்தச் சீர் குலைவும் இன்றி கிழக்கு மாகாணத்தில் உள்ளுராட்சி தேர்தல்களை நடத்த முடியும் என்ற நம்பிக்கை தமக்கிருப்பதாகவும் அவர் கூறினார்.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட சமயத்தில் கிழக்கில் தேர்தல்கள் நடத்த முடியாது என்று பலரும் எண்ணினார்கள் ஆனால் நிலைவரம் இன்று மாறி விட்டது என்றும் அவர் கூறினார். (த-எ)

## கொள்ளையில் ஈடுபட்ட ஜே.வி.பியினர் கைது

கொழும்பு, பெப் 11

கொள்ளைச் சம்பவம் ஒன்று தொடர்பாக ஜே.வி.பி. தலைவர்களில் ஒருவரும் மற்றும் 6 பேரும் இரத்தினபுரி பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பரக்கடுவ என்ற பகுதியில் வீடு ஒன்றை உடைத்து 45 தங்கப்பவுண்கள், 24 ஆயிரம் ரூபா பணம் மற்றும் 5 லட்சம் ரூபா பெறுமதியான புத்தம் புதிய வான் ஆகியவற்றை இக்கோஷ்டி கொள்ளையடித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருட்டுப் போன ரிவோல்வர் ஒன்றை பொலீஸார் கைப்பற்றினர்.

இதேவேளை —

கம்பஹாவில் அண்மையில் இடம்பெற்ற தீவிரவாத வன்செயல் தொடர்பாக ஜே வி. பி. தீவிரவாத இளைஞர் ஒருவரை நித்தம்புவ பொலீஸார் கைது செய்தனர்.

அவரது வீட்டில் இருந்து பொலீஸார் துப்பாக்கி ஒன்று, இரண்டு ஷொட்கண்கள், ஒரு பொறித்துவக்கு 28 தோட்டாக்களையும் பொலீஸார் கைப்பற்றினர். (த-எ)

## மூதறிஞர் படைப்புகளை வெளியிடுவதற்கு நிதியம்

### இரங்கலுரையில் பலரும் வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 11

மூதறிஞர் க. சி. குலரத்தினம் எழுதி வைத்துள்ள பெறுமதி மிக்க அவரது படைப்புகள் நூல் வடிவம் பெற வேண்டும். அதற்கான நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும்.

அவர் தேடி வைத்துள்ள பல லட்சம் ரூபா பெறுமதியான நூல்களை வைத்து ஒரு நூல் நிலையம் உருவாக்கப்பட வேண்டும். அதனை அமைக்கவும் பராமரிக்கவும் ஒரு நிதியம் தேவை.

நேற்று நடைபெற்ற மூதறிஞர் க. சி. குலரத்தினத்தின் இறுதிச் சடங்கில் இரங்கலுரை நிகழ்த்திய பலரும் மேற்கண்ட இரண்டு அம்சங்களையும் வலியுறுத்தினர்.

அவரின் பல்துறைத் திறமைகளையும், அவர் தமிழுக்கும் சைவத்திற்கும் ஆற்றிய பணியையும் நயந்தும், வியந்தும் உரை நிகழ்த்தினர்.

மூதறிஞரின் இறுதிச் சடங்குகள் நேற்றுக் காலை 9.30 மணிக்கு கந்தபுராண வீதியில் உள்ள இல்லத்தில் ஆரம்பமாகின

சமூகத்தின் பல்வேறு துறைகளையும் சேர்ந்த அறிஞர்கள், கல்விமான்கள்பிரமுகர்கள்மூதறிஞரின்பூதவுடலுக்குத் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

பெரும் எண்ணிக்கையான அவரது அபிமானிகள், அன்பர்கள் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டனர். (அ)

## பிரிவினைக்கு எதிராக---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு பிரதேசங்களில் மேற்கொண்டு வரும் தமது இராணுவ முஸ்தீபுகளை ஒரு பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கை என்றே கூறிவருகின்றனர்.

ஆனால் விடுதலைப் புலிகளுடனான யுத்தம் ஒரு சராசரிப் பயங்கரவாத இயக்கத்துடனான — அல்லது ஒரு தீவிர வாதக் குழுவுடனான யுத்தம் போன்று காணப்படவில்லை.

*அந்நிய நாட்டுடன் நடக்கும் யுத்தம் போன்றது*

அந்நிய நாடு ஒன்றுடன் நடத்தும் யுத்தம் ஒன்றைப் போலவே வடக்கு கிழக்கில் இடம்பெறும் யுத்த நடவடிக்கைகள் காணப்படுகின்றன.

இலங்கை இராணுவம் பல்வேறு பரிணாமங்களையும் பெற்றுள்ளது. படைக்கலங்கள், யுத்த வாகனங்கள் மட்டுமலாது ஆட்பலமும் என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுகின்றது. இலங்கை அரசின் இத்தகைய படைபல அதிகரிப்புகள் பாரிய அளவிலான இராணுவ விஸ்தரிப்பு ஒன்றையே புலப்படுத்தி நிற்கின்றது. இந்த விஸ்தரிப்பானது அந்நிய நாட்டுப் படை ஒன்றுடனான யுத்தத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டதைப் போன்றே விளங்குகின்றது.

*பலமிக்க அமைப்பாக விடுதலைப் புலிகள்*

உலகில் பல நாடுகளில் தீவிரவாத இயக்கங்கள், பயங்கரவாதக் குழுக்கள், பிரிவினைவாத அமைப்புக்கள் இருக்கக் காணப்படுகின்றன. ஆனால் இலங்கையில் இயங்கி வரும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் இன்று உலகில் உள்ள ஒரு பலம்மிக்க பிரிவினைவாத அமைப்பு என்று கூறுமளவுக்கு ஆயுத தளபாடங்கள், ஆளணிகளுடன் பலம் பெற்றிருக்கக் காணப்படுகின்றனர். ஒரு நாட்டின் தேசியப் படை போன்றே புலிகள் வடபகுதியில் இயங்கி வருவதை அறியக் கூடியதாக இருக்கின்றது.

இந் நிலையில் —

புலிகளுடன் மேற்கொள்ளப்படும் மோதல்களில் படையினர் வெற்றியை ஒருபோதும் இலகுவில் பெற்றுவிட முடியாது என்பது உறுதியாக இருக்கின்றது

புதிய தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா போர்த் தந்திரங்களை வடிவமைக்க முன்னர் இராணுவத்தை நல்ல முறையில் சீரமைக்க வேண்டும் என்பதில் ஆர்வமாக இருக்கிறார்.

இராணுவத்தினர் இடையேயும் பல்வேறு மனிதாபிமானப் பிரச்சினைகள் நிலவுவதை புதிய தளபதி சுட்டிக் காட்டியுள்ளார்.

யுத்தப் பிரதேசங்களில் நீண்ட காலம் கடமையாற்றுவதால் உளரீதியிலான பாதிப்புகள், பாலியல் பிரச்சினைகள் மற்றும் கடிதப் போக்குவரத்து தொலைத் தொடர்பு என்பனவற்றில் காணப்படும் சிக்கல்கள் என்பன படையினரைப் பெரும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளன என்று அவதானிக்கப்பட்டுள்ளது

*இராணுவத்தினர் உளரீதியாக பாதிப்பு*

இராணுவத்தினரில் பலர் உளரீதியிலான பாதிப்புகள் காரணமாக தம்மைத்தாமே சுட்டுத் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்களும் அதிகரித்துள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் —

வடக்கு-கிழக்கு யுத்தம் இலங்கையர்கள் அனைவரினதும் சக்திக்கு அப்பாற்பட்ட விதத்தில் ''கர்ணகடூரமாக'' விஸ்தாரமடைந்திருக்கக் காணப்படுகின்றது.

ஆனால் தேர்தல், தேர்தல் என்று கூறி கட்சித் தாவல்கள், அரசியல் திருகுதாளங்களில் ஈடுபட்டுள்ள தென்னிலங்கை அரசியலாளர்களுக்கு வடக்கு, கிழக்கு பிரச்சினையின் தாக்கத்தை நேரடியாக உணர்ந்தவர்கள் கூறுபவை 'செவிடன் காதில் ஊதிய சங்கொலியாகவே' இருக்கும் — என்று அந்தக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சரயேவோவில் இருந்து

## சேர்பிய, பொஸ்னிய படைகள் விலகாவிடின் விமான தாக்கு!

### நேட்டோ ராணுவ அணி அறிவிப்பு

பிரஸ்ஸல்ஸ், பெப். 11

பொஸ்னியா தலைநகர் சரயேவோவில் இருந்து தங்களின் கனரக ஆயுதங்களுடன் சேர்பியப் படைகளும், பொஸ்னிய அரசுப் படைகளும் பத்துத் தினங்களுக்குள் விலகிச் செல்ல வேண்டும் என்றும் —

தவறும்பட்சத்தில் விமானத் தாக்குதல் நடத்தப்படும் என்றும் நேட்டோ இராணுவ அணி காலக்கெடு விதித்துள்ளது

கடந்த இரண்டு ஆண்டுகளாக பொஸ்னியாவில் இடம்பெற்று வரும் சண்டையை முடிவுக்கு கொண்டு வர மேற்கு நாடுகள் எடுத்துள்ள அர்த்தமுள்ள நடவடிக்கை இது என்று பி பி ஸி அறிவித்தது.

நேட்டோ நாடுகளின் 16 பிரதிநிதிகள் 13 மணித்தியாலங்களுக்கு மேல் கலந்தாலோசனை நடத்திய பின்னர் — சண்டையிட்டு வரும் சேர்பிய, பொஸ்னியப் படைகளுக்கு இக்காலக்கெடுவை விதிப்பது என்று தீர்மானித்தது.

இக்காலக்கெடு நேற்று வியாழக்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வருவதாகவும் நேட்டோ அறிவித்துள்ளது

எக்காரணங்கொண்டும் இக்காலக்கெடு நீடிக்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

சரயேவோவில் இருந்து 20 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் இரு தரப்பினரும் தங்களுடைய கனரக ஆயுதங்களைக் கொண்டுபோய் ஐ.நாவின் கண்காணிப்பில் வைக்க வேண்டும் என்றும் காலக்கெடுவில் கூறப்பட்டுள்ளது

இக்காலக்கெடு விதிக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து சரயேவோவில் யுத்த நிறுத்தம் ஒன்று நேற்று முதல் அமுலுக்கு இருதரப்பினரின் ஆதரவுடன் வருவதாக இருந்தது.

பொஸ்னியாவில் உள்ள ஐ. நா. படையின் பிரதம தளபதி மைக்கல் ரோஸ் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-எ)

## டென்மார்க்கில் மீட்கப்பட்ட தமிழருக்கு புகலிடம் இல்லை?

கொபன்ஹேகன். பெப் 11

நடுக்கடலில் கப்பல் ஒன்றில் இருந்து ரப்பர் டிங்கிகளில் இறக்கி விடப்பட்ட நிலையில் டென்மார்க் அதிகாரிகளால் காப்பாற்றப்பட்ட 36 இலங்கைத் தமிழர்களும் 17-40 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் —

இவர்களில் இருவர் பெண்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது

கொபன்ஹேகனில் உள்ள பிரதான அகதிகள் நிலையத்தில் இத்தமிழர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு டென்மார்க்கில் தஞ்சம் கிடைக்கும் வாய்ப்பு மிகவும் குறைவாக உள்ளது என்றும் —

இவர்களை மீண்டும் இலங்கைக்கு அல்லது டென்மார்க்கை நோக்கி கடைசியாக எந்த நாட்டில் இருந்து புறப்பட்டார்களோ அந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பி வைப்பது பற்றி டென்மார்க் அதிகாரிகள் பரிசிலனை செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் கொழும்பில் இருந்து மாஸ்கோ வழியாக லித்துவேனியாவை அடைந்தனர் என்றும்

அங்கிருந்து பின்பு பால்டிக் கடல் ஊடாக ரஷ்ய கொள்கலன் கப்பல் ஒன்றில் ஏற்றப்பட்டு டென்மார்க் கடலோரமாக ரப்பர் டிங்கிகளில் இறக்கி விடப்பட்டனர் என்றும் டென்மார்க் செய்திகள் தெரிவித்தன.

டிங்கிகளில் இவர்கள் கடலில் தத்தளித்தபோது வெப்பநிலை 16 சென்ரி கிறேருக்குக் கீழே இருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் ஒரு ஏஜண்ட் தங்களுக்கு இப்பயணத்தை ஏற்பாடு செய்ததாகவும் — ஒவ்வொருவரும் இதற்காக ஒன்றரை லட்சம் ரூபாவை அந்த ஏஜண்டுக்குக் கொடுத்ததாகவும் இத்தமிழர்கள் ஒப்புக் கொண்டனர்.

'அரசியல் பிரச்சினை' காரணமாக தாங்கள் இலங்கையை விட்டு வெளியேறியதாகக் கூறிய இத்தமிழர்கள் இது பற்றிய விவரங்களை டெலிவிஷனில் தெரிவிக்க மறுத்துவிட்டனர் என்று டென்மார்க்கில் உள்ள தமது செய்தியாளரை மேற்கோள் காட்டி டெய்லி நியூஸ் தெரிவித்தது. (த-எ)

## ஆங்கில ஆசிரியர் முன் சேவை பயிற்சி

நீர் கொழும்பில் நடைபெற இருந்த ஆங்கில ஆசிரியர்களுக்கான முன்சேவைப் பயிற்சி எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

இப்பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் நாளை சனிக்காலை 10.30 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரியில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு துரைதியாகராஜாவை சந்திக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். [த]

## 41 லட்சம் ரூபா கடத்திய பெண்!

கொழும்பு, பெப் 11

41 லட்சம் ரூபா பெறுமதியான அறுபது தங்க பிஸ்கட்டுகளை உள்ளாடைக்குள் மறைத்து வந்த இலங்கைப் பெண் ஒருவரை சுங்க அதிகாரிகள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கடந்த சனிக்கிழமை பிடித்தனர்.

சிங்கப்பூரில் இருந்து அப்பெண் விமானமூலம் வந்திருந்தார்.

விசாரணையின் பின்னர் தங்க பிஸ்கட்டுகளைப் பறிமுதல் செய்யும்படி உத்தரவிட்ட சுங்க அத்தியட்சகர், அப்பெண்ணுக்கு ஒரு கோடி 23 லட்சம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ஒ-எ)

## மத்திய கிழக்கு உடன்பாடு முட்டுக்கட்டை நீங்கியது?

மத்தியகிழக்கு அமைதி உடன்பாட்டை அமுல் நடத்துவதில் இருந்த சில முட்டுக்கட்டைகளைத் தீர்ப்பது தொடர்பாக இஸ்ரேலும் பலஸ்தீன விடுதலை இயக்கமும் உடன்பாடு கண்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

கெய்ரோவில் நடந்த பேச்சுக்களின் பின்னர் இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் ஷிமோன் பெரேஸும் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸிர் அரபாத்தும் இது தொடர்பான உடன்பாட்டில் கையெழுத்திட்டனர்.

வரையறுக்கப்பட்ட சுயாட்சி வழங்கப்படவிருக்கும் காஸா மற்றும் ஜெரிக்கோ பிரதேசத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையேயான எல்லையை கூட்டுக் கண்காணிப்பில் வைத்துக் கொள்வது என்றும்—

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசத்தில் உள்ள யூதக் குடியிருப்பாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது என்றும் உடன்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-எ)

## மதுவரி பரிசோதகர் பதவி

யாழ்ப்பாணம், பெப் 11

கொழும்பு மதுவரித் திணைக்கள ஆணையாளரினால் மதுவரிப் பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதி தினம் எதிர்வரும் 23 ஆம் திகதியாகும்

பெப்ரவரி 23 ஆம் திகதி அன்று 18 தொடக்கம் 25 வயதுக்கு உட்பட்டவர்கள் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை உதவி மதுவரி ஆணையாளர், இலக்கம் 665/. கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பதவி வெற்றிடம் தொடர்பான வர்த்தமானியின் அறிவித்தல் இங்கு கிடைத்துள்ளது. அந்த வர்த்தமானியின் பிரதியை இலக்கம் 15, இரண்டாவது ஒழுங்கை மின்சார நிலைய வீதியில் உள்ள உதயன் விளம்பர பணிமனையில் பார்வையிடலாம். (ஒ-5-30)

## உபவேந்தர் ராஜினாமாவை ஜனாதிபதி ஏற்றார்

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவின் ராஜினாமாவை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க ஏற்றுக்கொண்டார்.

அதைத் தொடர்ந்து, பல்கலைக்கழக பேரவையைக் கூட்டி துணைவேந்தராக ஒருவரைத் தெரிவு செய்வதற்காக மூவரின் பெயரை அனுப்புமாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு யாழ். பல்கலைக்கழக பதிவாளரைக் கேட்டுள்ளது.

இதேவேளை— யாழ். பல்கலைக்கழக பேரவையின் உறுப்பினர்களாக திரு. கா. மாணிக்கவாசகர் (அரச அதிபர்), திரு. ஆர். சுந்தரலிங்கம் (முன்னாள் கல்விப்பணிப்பாளர்), வண. பிதா ஜெபநேசன், டாக்டர் கணேசரத்தினம், திரு. தேவசிகாமணி, திரு. சோமசுந்தரம்பிள்ளை, திரு. நாகரத்தினம் ஆகியோர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் இவர்கள் நியமனம் பெறுகின்றனர். (த—3)

## உணவு நிவாரண முத்திரை எடுத்து வருவதில் தாமதம்

### இன்னும் அச்சிடப்பட வில்லையாம்

யாழ்ப்பாணம், பெப். 11

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான மார்ச் மாத உலர் உணவு நிவாரண முத்திரைகளை இம்முறை இங்கு எடுத்து வருவது தாமதமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் உரிய நேரத்தில் கப்பலில் சேர்க்கப்பட்டாலே அவை இங்கு வந்து சேர்வது வழக்கம்.

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தில் கிழக்கு மாகாண உள்ளுராட்சித் தேர்தல்களுக்கான வாக்காளர் சீட்டுக்களை அச்சிடும் வேலைகள் துரித கெதியில் நடந்து வருவதாகவும், இதனால் உணவு முத்திரைகள் அங்கு இன்னமும் அச்சிடப்படவில்லை என்றும் கொழும்பில் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

உணவு முத்திரைகள் அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்திலேயே அச்சிடப்படுகின்றன.

குடாநாட்டில் சுமார் 60 ஆயிரம் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு இந்த உணவு முத்திரைகள் மூலம் உலர் உணவு விநியோகிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

## விளையாட்டு நிகழ்வுகள்

பாடசாலை அணிகள் பங்குபற்றும் கிரிக்கெட் ஆட்டங்களில் இன்றும், நாளையும் நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு;

★ சென்பற்றிக்ஸ் மைதானத்தில் மானிப்பாய் இந்து எதிர் சென். பற்றிக்ஸ் அணி.

★ சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் சென். ஜோன்ஸ் எதிர் ஸ்கந்தா.

★ யாழ். இந்து மைதானத்தில் ஷப்றா வி. க எதிர் யாழ் இந்து.

கொக்குவில் இந்து மைதானத்தில் கனகரத்தினம் ம. ம. வி. எதிர் கொக்குவில் இந்து இன்று பிச்பகல் 2-30 மணி முதல் 5-30 மணி வரையும்— நாளை காலை 8-30மணி முதல் மாலை 5-30 மணி வரையும் ஆட்டங்கள் நடைபெறும். [உ]

## இன்று

அரியாலையில் நடைபெறும் 75 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட பவள விழா நிகழ்ச்சிகளின் தொடரில் இடம் பெற்றுவரும் கலைப் போட்டிகளில் —

பாப்பா மலர் தொடர்பான போட்டிகள் இன்று வெள்ளி பிற்பகல் 3 மணிக்கு அரியாலை அருணோதயா ச. ச. நிலையத்தில் நடைபெறும். (த-5)

★ ★ ★

யாழ். மத்திய கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு. நா. க. சண்முக பிள்ளை தலைமையில் நடைபெறும். (த)

★ ★ ★

திருவெம்பா பூஜையை முன்னிட்டு ஈச்சமோட்டை இந்து இளைஞர் மன்றம் நடத்திய சைவசமயப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு மேற்படி மன்ற அலுவலகத்தில் நடைபெறும். (த-17)

★ ★ ★

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர் தின விழா லெப். கேணல் குணா நினைவு மண்டபம் திறப்பு விழா, கல்லூரி சஞ்சிகை வெளியீட்டு விழா ஆகியவை இன்று வெள்ளி காலை 8-30 மணிக்கு நடைபெறும்.

விழாவில் முதன்மை விருந்தினராக யாழ். பிராந்திய தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பியும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி சிறப்புத் தளபதி கந்தண்ணாவும் கௌரவ விருந்தினராக தென்மராட்சிக் கல்விக் கோட்ட பிரதிப் பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கமும் கலந்து கொள்வர். (த-117)

★ ★ ★

சங்கானைக் கோட்டப் பாடசாலை அதிபர்களின் கூட்டமொன்று இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெறும். (க-152)

★ ★ ★

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை ''திண்ணப்பன் என்னும் கண்ணப்பன்'' எனும் பொருளில் கலாவினோதன் சின்னமணி க நா. கணபதிப் பிள்ளை உரை நிகழ்த்துவார். உடுப்பிட்டி ப. நோ. கூ ச. தலைவர் திரு சி. கணபதிப் பிள்ளை அறிமுகவுரையை நிகழ்த்துவார். (க)

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், பெப், 11

கடந்த செவ்வாய் மாலை ஆனையிறவுப் பகுதியில் நடந்த ஷெல் தாக்குதலில் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளியான இரண்டாம் லெப்டினன்ட் ஜெயசீலன் (இராமலிங்கம் நித்தியராஜா விகவமடு) வீரச்சாவு அடைந்தார். (ஒ-3)

## நாளை

1993 ஆம் ஆண்டுக்கான யாழ். மாவட்ட மனைப் பொருளியல் மூலவள நிலைய போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை பிற்பகல் 2 மணிக்கு யாழ். கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும். (த-155)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போயிட்டி லூர்து அன்னை வருடாந்த திருவிழா

இடம்: மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயம்
காலம்: நாளை [12 - 02 - 1994] சனிக்கிழமை காலை 7 மணிக்கு கூட்டுத் திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

-போயிட்டி பங்கு மக்கள்.

(29375)



## சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோ நூற்றாண்டு விழா

பருத்தித்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம ஆதரவில் யாழ். நகரில் நடைபெறுகிறது.

இடம்: நாவலர் கலாசார மண்டபம்
காலம்: நாளை சனிக்கிழமை — (12 2-94)
நேரம்: பிற்பகல் 3 மணி
தலைவர்: திரு வே. பொ. பாலசிங்கம் (யாழ். மாநகர ஆணையாளர்)

சிறப்புச் சொற்பொழிவு:
திருமதி நாச்சியார் செல்வநாயகம் (M A) (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)

சிறப்பு நிகழ்வு:
சுவாமி விவேகானந்தரின் உலகச் சமயப் பெருவிழாவினையொட்டிய மலர் வெளியீடு.

சேவாச்சிரமம் அகில இலங்கை ரீதியாக நடத்திய நூற்றாண்டு கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றோருக்கு விழாவில் பரிசில்கள் வழங்கப்படும்.

சபை நூல்கள் யாவும் மிக மலிவு விலையில் விழாவில் விற்கப்படும். நூல்களை வாங்குவோர் இக்குறைப் தவிர்த்துப் பணம் கொண்டு வருமாறு தயவுடன் வேண்டுகிறோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்
சுவாமி சித்ரூபானந்தா,

(சி/7318)



## ★ திறப்பு விழா ★
## சிங்கம் இன்டஸ்றீஸ்

மேற்படி ஸ்தாபனத்தின் கிளை இல: 290, ஆஸ்பத்திரி வீதியில் இன்று (11-02-94) காலை 5-30 – 6-30 வரையிலான சுபநேரத்தில் திறந்துள்ளோம் என்பதனை வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

**சிங்கம் இன்டஸ்றீஸ்**
1029/3 கே. கே. எஸ் வீதி.
யாழ்ப்பாணம்.

(29381)



## கோல்டன் கொமட் சேவல் குஞ்சுகள் விற்பனைக்கு

கோல்டன் கொமட் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு.

"மல்லிகாபதி"
சந்தை கிழக்கு ஒழுங்கை,
மானிப்பாய்.

(29377)



## அமரர் ஜெனிபர் எலிசபெத் செல்வமதியின் (செல்வி) 11ஆம் நாள் நினைவுத் திருப்பலி

ஈன்றவள் மகிழ 08 — 07 — 74



இதயம் நெகிழ 03 — 02 — 94

எங்கள் அருமைச் செல்வியின் ஆன்ம இளைப்பாற்றிக்கான இரங்கல் திருப்பலி நாளை (12—02—94) சனிக்கிழமை காலை 6 மணிக்கு அருள் ஆச்சிரமத்தில் இடம்பெறும்.

இத்திருப்பலியில் உற்றார், உறவினர், நண்பர்களைக் கலந்து கொண்டு இவருக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

— குடும்பத்தினர்

16/1, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/7316)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 11-02-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## ஆலயங்களில்

சனீஸ்வரன் சங்கிரமித்தல் பொருட்டு, இன்று வெள்ளிக்கிழமை மூளாய் சித்தி விநாயகர் ஆலயத்தில் நவகுண்ட நவரோத்தர (1008) கலச சங்காபிசேகம் நடைபெறவுள்ளது.

இன்றைய சஞ்சலம் நீங்கி அனைவரும் சாந்தியடையும் வண்ணம் சங்காபிசேகம் இடம்பெறும். (ஓ-3)

★ ★ ★

கொக்குவில் கிழக்கு கோணாவளை வைரவர் கோயிலின் மஹாகும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். (க-17)

## சாவகச்சேரி இந்து தாபகர் தினம்

சாவகச்சேரி, பெப். 11

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 - 30 மணிக்கு தாபகர் தினம் நினைவு கூரப்படவிருக்கின்றது. அத்துடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குணா ஞாபகார்த்த மண்டபம் ஒன்றும் திறந்து வைக்கப்படவுள்ளதுடன், கல்லூரிச் சஞ்சிகையும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

பிரதம விருந்தினராக கல்விப் பணிப்பாளர் செல்வி இ. பெரியதம்பியும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி சிறப்புத் தளபதி பொ. கந்தண்ணாவும், கௌரவ விருந்தினராக தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பு. கணேசலிங்கமும் கலந்து கொள்வர்.

தாபகர் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் கலாநிதி க. சிற்றம்பலம் நிகழ்த்துவார்.

இறுதியாக கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஓ-117-13)


## SCIENCE COLLEGE

பெருமாள் கோவில் வீதி
யாழ்ப்பாணம்

✲ PHYSICS ✲

**MR. SOORIYA**
B. Sc. (Hons) Dip In. Ed.

ஆரம்பம்:
**12 - 02 - 94**
4-15 p m.

94 A/L Theory: 4-15p.m.
94 A/L மீட்டல்: 5-15 p m.

[சி-7309]


## திறப்பு விழா

யாழ். மாவட்ட நகைத் தொழிலாளர் சங்கத்தின் பணிமனை, யாழ். கஸ்தூரியார் வீதியில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 30 மணிக்கு திறந்து வைக்கப்படும்.

இனப்பிரச்சினை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வியாகும்.

தற்போதைய அரசாங்கமும் பொது நீதி நெறிகளை மதிக்கவில்லை என்பது தெளிவாகியுள்ளது.

உடுகம்பொல விவகாரம், எம்பிலிப்பிட்டிய மாணவர் படுகொலை ஆகியன இதற்கு உதாரணங்களாக உள்ளன.

அதிகாரப்பரவலாக்கல் விஷயத்தில் அரசாங்கம் எப்படி நடந்து கொள்கிறது என்பது தான் சோதனைக்குரியது.

தாயகம் போன்ற கோரிக்கையை அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கல் மூலம் மட்டுமே தீர்க்கமுடியும். ஆகவே பேச்சுகள் மூலம் தீர்வுகாண அரசு விரும்புமானால், மாகாணசபை முறை நல்ல முறையில் அமுல் நடத்தப்படுகின்றது என்பதை அரசாங்கம் காட்டவேண்டும்.

ஆனால் அண்மைக் காலத்தில் என்ன நடந்துள்ளது. தென்மாகாண சபை உறுப்பினர் கடத்தப்பட்டார் பின்னர் சபை கலைக்கப்பட்டது.

இது மட்டும் போதாது. எதிர்வரும் கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தல் வேலிக் கூத்தாக்கப்பட்டுள்ளது. மக்கள் கடத்திச் செல்லப்பட்டு ஐ. தே. க வேட்புமனுக்களில் அவர்களின் கையெழுத்து பயமுறுத்தலின் கீழ் வாங்கப்பட்டுள்ளது.

பாண்டா - செல்வா, டட்லி - செல்வா உடன்படிக்கைகள் அமுல் நடத்தப்பட்டிருந்தால் இன்று இனப்பிரச்சினையே இருந்திருக்காது.

அர்த்தமுள்ள, நிரந்தர தீர்வு ஒன்று காணப்படுவதற்கு தேவையான பொது நீதி நெறியை மதிக்கும் தன்மை இல்லாதிருக்கிறது.

இவ்வாறு கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## இன்று சனி மாற்றம்

யாழ்ப்பாணம், பெப். 11

இன்று வெள்ளிக்கிழமை (11 - 2 - 94) இரவு பத்து மணியளவில் சனிபகவான் மகர ராசியில் இருந்து கும்ப ராசிக்கு மாறுகிறார். வாக்கிய பஞ்சாங்கம் இந்த விவரத்தை தெரிவிக்கிறது. சனிபகவான் கும்பராசியில் இரண்டரை வருடங்கள் வரை சஞ்சாரம் செய்வார். (அ)

## வடமராட்சி பிரிவுப்போட்டி

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ். றோட்டறக்ட் கழகத்தால் நடத்தப்பட்டு வரும் பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான பொது அறிவுப் போட்டித் தொடரில் வடமராட்சிப் பிரிவுக்கான போட்டிகள் இன்று பிற்பகல் 2 00 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். (இ)

## பரிசளிப்பு விழா

சண்டிலிப்பாய், பெப். 11

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், கலை நிகழ்ச்சிகளும் நாளை சனிக்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளன.

கல்லூரி அதிபர் திருமதி வி. பசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் பிரதம அதிதியாக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராசா கலந்து கொள்வார். திருமதி இ. துரைராசா பரிசில்களை வழங்குவார்.

நம்பிக்கையில்லாப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு நிலைமை திருப்திகரமாக இல்லை என்பதை ஏற்றுக்கொண்ட திருமதி பண்டாரநாயக்கா, அமைச்சர்களும் அரச எம். பிக்களும் கிழக்கு தேர்தல் பிரசாரங்களுக்கு ஹெலிக்கொப்டர்களைப் பயன்படுத்தி வருகின்றனர் என்று குற்றஞ்சாட்டினார். (இ-எ-6)


## தேவை

ஒப்பந்த அடிப்படையில் விறகு தறிப்பதற்கு, கூலி ஆட்கள் தேவை

- தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்

★ சூழல் பாதுகாப்பு நிறுவனம், மணற்காடு.

★ சூழல் பாதுகாப்புப் பகுதி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்.

தாவடி.

(சி/7314)



## யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை மகளிர்குழு

நடத்தும்

## பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான அனைத்துலக மகளிர் தினம் தொடர்பான போட்டிகள்

| போட்டி விபரம் | பங்குபற்றக் கூடிய ஆண்டு | விடயம் | நேரம் |
|---|---|---|---|
| கீழ்ப்பிரிவு பேச்சு | 8, 9 | சர்வதேச மகளிர் தினம் | 5—7 நிமிடம் |
| மத்தியபிரிவு பேச்சு | 10, 11 | இன்றைய நிலையில் பாரதி கண்ட புதுமைப்பெண் | 5—7 நிமிடம் |
| மேற்பிரிவு பேச்சு | 12, 13 | பெண்களும் சீதனப் பிரச்சினையும் | 6—8 நிமிடம் |
| கீழ்ப்பிரிவு கட்டுரை | 8, 9 | சமூக சேவையில் மகளிர் | 30 நிமிடம் |
| மத்தியபிரிவு கட்டுரை | 10, 11 | இன்றைய நெருக்கடி நிலையில் மகளிர் பங்களிப்பு | 45 நிமிடம் |
| மேற்பிரிவு கட்டுரை | 12, 13 | யாழ். மாவட்ட அபிவிருத்தியில் பெண்கள் | 1 மணித்தியாலம் |

மேற்படி போட்டியில் பங்கு பற்ற விரும்பும் மாணவர்கள் விண்ணப்பங்களை தயாரித்து பாடசாலை அதிபரின் சிபார்சுடன் "செயலாளர் யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபை, இல 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்," என்னும் முகவரிக்கு 21 — 02 — 1994க்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

போட்டிகள் 05 — 03 — 1994 சனிக்கிழமை யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையில் நடைபெறும். தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்பப்படமாட்டா.

— செயலாளர்.

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை,
10 - 02 1994.

[சி-7313]



## தேவை

வீல்செயர் (Wheel Chair) விற்பனைக்கு வைத்திருப்பவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

இல, 604 C / o உதயன்

(29384)



## ஈச்சமோட்டை ஸ்ரீ ஞானவைரவர் இந்து இளைஞர் மன்றம் பரிசளிப்பு விழா

கடந்த (28-12-1993) திருவெம்பாவை உற்சவதினத்தன்று நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிக்கான பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு தலைவர் ந. சர்வகுணசீலன் தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

போட்டியில் சித்தியடைந்தவர்களுக்கும், பங்குபற்றியவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகம்

விளம்பர அன்பளிப்பு:-
அண்ணா கோப்பி
இணுவில்

(7317)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்வரெட்ணம் பொன்னுமணி

திருமதி செல்வரெட்ணம் பொன்னுமணி (மேரி மாகிறெட்) 10-02-94இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற செல்வரெட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பறுவதபிள்ளை, கனகம்மாவின் சிரேஷ்ட புத்திரியும், போசல், அன்னம்மாவின் மருமகளும், ஜி. எம். செபஸ்ரியாம்பிள்ளை, காலஞ்சென்ற அருள்ராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், மலர், பொன்ராசா, யோகம், ஜீவம், செல்வம், ஜோதி, காலஞ்சென்ற ராணி, பபி, றொபேட் ஆகியோரின் அருமைத் தாயும், யேம்ஸ், ரஞ்சினி, புஷ்பம், மல்லிகா, புஸ்பராசா, கொன்சி, ஜோர்ஜ், கமலா ஆகியோரின் மாமியும், அல்பேட், அருள்மணி, நேசமணி, காலஞ்சென்ற தங்கராசா, தவமணி, ஞானபுஷ்பம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக நாளை [12-02-94] காலை சனிக்கிழமை 9 மணிக்கு 70, பழையபூங்கா வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து அர்ச். கொஞ்செஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
M. யேம்ஸ்
(யா. மா. ச. பாதுகாவலர்)

70, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

(29374)

### சி. சிவக்கொழுந்து
(சின்னச் சட்டம்பியார்)

யாழ். வீதி, வசாவிளானைச் சேர்ந்தவரும் தற்சமயம் ஞானவைரவர் ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கில் வசித்து வந்தவருமாகிய திரு. சின்னையா சிவக்கொழுந்து (சின்னச் சட்டம்பியார்) இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் வயாவிளான் கணேச வித்தியாலயத்தின் முன்னாள் அதிபரும், இ. நகுலாம்பிகையின் (பரஞ்சோதி வித்தியாலய இளைப்பாறிய ஆசிரியர்) அன்புக் கணவரும், சிவகுமார், சிறிகுமார், சிறிரங்கன் ஆகியோரது அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இன்று (11 - 02 - 94) 11.30 மணியளவில் கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

கோண்டாவில்.

(29385)

### திருமதி சின்னத்துரை லில்லிமலர் [யோகம்மா]

இணுவில் மேற்கு ஏரம்பர் சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும், அமரர்கள் பாக்கியம், இராமநாதன், திருமதி த. சோதிப்பிள்ளை, திரு. சி. துரைராசா, திருமதி வி. ஞானமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு. சுந்தரலிங்கம் (பிரான்ஸ்), திரு. சண்முகலிங்கம் (ஆசிரியர்-சங்குவேலி அரசினர் த. க. பாடசாலை), திரு. சிவதேசலிங்கம் (பிரான்ஸ்), திருமதி உ. தேவசேனா (பிரான்ஸ்), திருமதி க. இந்திரசேனா, திருமதி சு. விஜயசேனா (பிரான்ஸ்) திரு. அமிர்தலிங்கம் (பிரான்ஸ்), திருமதி அ. பதுமசேனா, (ரதி) (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி சு. மண்டலநாயகி (ஆசிரியை- விஜயரத்தினம் ம. வி - நீர்கொழும்பு) திருமதி ச. சந்திராதேவி, திருமதி சி. பாமதி (பிரான்ஸ்), திரு. பொன்னையா உருத்திராங்கதன் (பிரான்ஸ்), திரு. விவாசித்தம்பி கனகநாயகம் (சன்யோ கூல்பார் சுன்னாகம்), திரு. கதிரவேலு சுந்தரலிங்கம் (பிரான்ஸ்), திருமதி அ. இராசேஸ்வரி (பிரான்ஸ்) திரு. விநாயகமூர்த்தி அருள்நேசன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமியாரும், சு. நிவேதினி (டிம்பிள்) சி. நிரஞ்சினி (பவா), சு. மதன் சு. கடம்பன் (செல்லா), ச. பிரசாந், ச. துஷிந்தா, ச. ரஜீவ்சாந்தி, சி. சாதனா, சு. சுமியா, சு. ஆர்ஷேனர், சு. அருணன், அ. இராஜராஜன், அ. ஜெனனி, அ. மெளனி ஆகியோரின் பாட்டியுமாகிய திருமதி சின்னத்துரை லில்லிமலர் அம்மையார் நேற்று (10 2 94) வியாழன் அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றையதினம் பி. ப. 5-00மணிக்கு தாவடி மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
ஏ. சி சண்முகலிங்கம்

இணுவில் மேற்கு,

(6693)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org